TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 -OCT 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1970 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

லீபுரத்தை மீன்பிடித் துறைமுகமாக்கல்

* 489 **வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், லீபுரம் துறைமுகத்தை ஓர் சிறிய மீன்பிடித் துறைமுகமாகச் செப்பனிட அரசினிடம் ஏதேனும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த லீபுரம துறைமுகத்திற்குப் பக்கத்தில் சிறு சிறு துறைமுகங்கள் அமைப்பதற்கு வாய்ப்பாகவுள்ள அநேக இடங்கள் இருக்கின்றன. பெரியதாளை, உவரி ஆகிய இடங்களில் அதிகமான மீன் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாலும், அங்கே படகுகளை நிறுத்துவதற்கு மிகவும் கஷ்டப்படுவதாலும், அங்கு படகுகளை நிறுத்துவதற்கான வசதியையாவது செய்து கொடுக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, படகுகளை நிறுத்துவதற்கு வசதி செய்து தரத்தான், லீபுரம், முட்டம் ஆகிய இடங்கள் தற்காலிகமாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றன. அங்கு படகுகள் தங்க வசதி செய்ய உத்தேசிக் கப்பட்டிருக்கிறது. ஆனால், துறைமுகத்தைக் கொளச்சல் பகுதி யில் நிறுவுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது. நான்காவது ஐந்தாவது திட்டத்தின் கீழ் இப்படிப்பட்ட திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் தற்சமயம் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற மீன்பிடித் துறைமுகம், சிறிய மீனவர்களுடைய படகுகள் நிற்கும் இடமாக இருந்தது. இப்பொழுது அவர்களுடைய படகுகள் நிற்பதற்கு இடமில்லாம லிருக்கிறது. எனவே, அவர்களுடைய தொழில் பாதிக்கப்படாம லிருக்கும் முறையில், அவர்களுடைய படகுகளை நிறுத்துவதற்கு இட வசதி செய்து கொடுக்க அரசாங்கம் உடனடியாக முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தூத்துக் குடியில் மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இப்பொழுது வேலைகளெல்லாம் துவக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. எந்தெந்த வகையில் எப்படி யெல்லாம் நடைபெறுகின்றன என்ற விளக்கத்திற்குத் தனிக் கேள்வி போட்டால், விளக்கமாகப் பதில் தரப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, கொளச்சல் துறைமுகம் வேலை எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினார்கள். அது எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்? அதற் கான எஸ்டிமேட் தொகை என்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கொளச்ச லில் துறைமுகம், லீபுரம், முட்டம் ஆகிய இரண்டு இடங்களில் 'ஜெட்டி' என்று சொல்லப்படுகிற படகுகள் தங்கும் இடங்களை அமைப்பது குறித்து 1964-ம் ஆண்டில் ஹைட்ரோக்ராஃபிக் சர்வே செய்யப்பட்டது. 2.90 இலட்ச ரூபாய் செலவிட்டு அந்த ஹைட் ரோக்ராஃபிக் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. அதை அமைப்ப தற்கு எவ்வளவு தொகை வேண்டும், எந்த எந்த அளவுள்ள பெரிய கப்பல்கள், மீன்பிடி படகுகள் தேவைப்படுகின்றன, இன்னும் எந் தெந்த அளவுக்கு எவ்வளவு மீன் அங்கே கிடைக்கும் என்பதைப் பற்றியெல்லாம் இப்பொழுது அரசாங்கம் பரிசிலனை செய்துகொண் டிருக்கிறது. இந்தப் பரிசிலனை முடிந்த பிறகு நான்காவது ஐந் தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கு மானால் நிச்சயமாக இதனை ஏற்றுக்கொள்ள முடியும்.

நீர் ஊற்றுக்கள்

*** 490 வினா—திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தானாக பீரிடும் நீர் ஊற்றுக்கள் (ஆர்டீஷியன் கிணறுகள்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) தமிழகத்தில் வேறு எந்தெந்த இடங்களில் இந்நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

(உ) இந்நீர் பாசனத்திற்குப் பயன்படும் வகையில் வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) (1) தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், விருத்தா சலம், கடலூர் தாலுக்காக்களிலும்;

(2) திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் தாலுக்கா விலும்;